www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கர்நாடக சங்கீதம் Music | Three Hours / Gr -12 (2022) | 55 | T | I,II |

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. மனோதர்ம சங்கீதப் பிரிவுகளில் இராகத்தின் முழு இலட்சணங்களையும், முழு சொரூபத்தையும் வெளிப்படுத்துவது.
    1) கற்பனாஸ்வரம் 2) பல்லவி 3) இராகம்
    4) தாளம் 5) நிரவல்

02. N. வீரமணிஜயரால் இயற்றப்பட்ட உருப்படி.
    1) தஞ்சம் 2) பாஹிமாம்ஸ்ரீ 3) வலசிவச்சி
    4) ஞானம் அருள்வாய் 5) பார்வதி நாயகனே

03. தமிழில் பஞ்ச தாள சூளாதியை இயற்றியவர்
    1) புரந்தரதாஸர் 2) வேங்கடமகி
    3) தஞ்சை K. பொன்னையாப்பிள்ளை 4) திருப்பதி அன்னமாச்சாரியார்
    5) ஸ்வாதித்திருநாள் மகாராஜா

04. அஸம்பூர்ண மேளபத்ததியில் "சாமரமே" என அழைக்கப்படும் இராகம்.
    1) சண்முகப்பிரியா 2) சங்கராபரணம் 3) கீரவாணி
    4) கரகரப்பிரியா 5) பந்துவராளி

05. பண்டைக்காலத்தில் "சல்லரி" என அழைக்கப்படும் வாத்தியம்.
    1) முகர்சிங் 2) பிடில் 3) கெஞ்சிரா
    4) கடம் 5) நாஸ்வரம்

06. ஸ்வாதித் திருநாள் மகாராஜா 12 பாடல்களைக் கொண்டு இயற்றிய ஹரிகதை.
    1) அஜாமிலோபாக்கியானம் 2) உற்சவபிரபந்தம் 3) துருவபதங்கள்
    4) குசேலோபாக்கியானம் 5) கசல்கள்

07. ஐந்து விரல்களை பயன்படுத்தி இசைக்கருவிகளை வாசிக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்.
    1) அமீர்குஸ்ரு 2) பாக் 3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
    4) விநாயகராவ் 5) தான்சேன்

08. த்வி அன்னியஸ்வர பாஷாங்க ராகத்திற்கு ஓர் உதாரணம்.
    1) பிலஹரி 2) ஹிந்துஸ்தான்காபி 3) காம்போதி
    4) அடானா 5) பைரவி

09. பிரசித்தி பெற்ற பஞ்சம வர்ஜராகம்.
    1) பிலஹரி 2) வசந்தா 3) ஹம்சத்வனி 4) மத்தியமாவதி 5) மோகனம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

10. ஆரோகண அவரோகனத்திலேயே அன்னியஸ்வரம் ஒலிக்காமல் சஞ்சாரங்களில் மட்டும் அன்னியஸ்வரம் ஒலிக்கும் இராகம்.
1) முகாரி 2) காம்போதி 3) பைரவி 4) பிலஹரி 5) கமாஸ்

11. இராகாங்க இராகம் எனப்படுவது.
1) உபாங்க இராகம் 2) பாஷாங்கராகம் 3) ஜனகராகம்
4) சேய்ராகம் 5) வர்ஜராகம்

12. தேவார காலம் என அழைக்கப்பட்ட காலப்பகுதி.
1) 18ம் நூற்றாண்டு 2) 15ம் நூற்றாண்டு 3) 20ம் நூற்றாண்டு
4) 7ம், 8ம் நூற்றாண்டு 5) 13ம் நூற்றாண்டு

13. தனது 9 வயது மகளுக்காக “Little book for the key board” யை இயற்றிய வாக்கேயகாரர்.
1) அமீர்குஸ்ரு 2) மொஹாட் 3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
4) தான்சேன் 5) பாக்

14. ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ என்னும் ஆரோகண அவரோகணத்தையுடைய ராகம்.
1) ஹம்சத்வனி 2) ஆபோகி 3) ஸ்ரீரஞ்சனி
4) மோகனம் 5) வசந்தா

15. ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், காகலிநிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களைக் கொண்ட ராகம்.
1) ஹம்சத்வனி 2) மத்தியமாவதி 3) ஆபோகி
4) மோகனம் 5) ஆரபி

16. 1956 இல் ஜனாதிபதி விருது பெற்ற இந்திய இசைக் கலைஞர்.
1) M.L.வசந்தகுமாரி 2) M.S.சுப்புலட்சுமி 3) பட்டம்மாள்
4) பாலமுரளி கிருஷ்ணா 5) N.சண்முகரட்ணம்

17. தாளத்தினை இரண்டு களையாகப்போட்டுப் பாடப்படும் உருப்படி வகைகளைக் கொண்ட தொகுதி.
1) வர்ணம், சௌக்ககாலக்கிருதி 2) சௌக்ககாலக்கிருதி , தில்லானா
3) பதம், தில்லானா 4) மத்தியகாலக்கீர்த்தனை, சௌக்ககாலக்கிருதி
5) வர்ணம், பதம்

18. “வலசி” எனத் தொடங்கும் இராகமாலிகை வர்ணத்தின் பல்லவி அமைந்துள்ள ராகம்.
1) கல்யாணி 2) சங்கராபரணம் 3) மோகனம்
4) ஸ்ரீராகம் 5) கேதாரம்

19. இராம நாடக கீர்த்தனைகளை இயற்றியவர்.
1) அருணாசலக்கவிராயர் 2) முத்துத்தாண்டவர் 3) புரந்தரதாஸர்
4) பாபநாசம்சிவன் 5) தியாகராஜசுவாமிகள்

20. இலங்கையில் பண்ணிசை வளர்ச்சிக்கு பணியாற்றியவர்.
1) N.சண்முகரட்ணம் 2) சு.வித்தியானந்தன் 3) சி.மௌனகுரு
4) N.வீரமணிஐயர் 5) குப்பிளான் செல்லத்துரை

(20X1=20புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி II

❖ **"அ" பகுதியில் எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில், இருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடைதருக.**

### "அ" பகுதி

01. 1) அமீர் குஸ்ருவின் இயற்பெயரைத் தருக.
   2) இசையிலும் பரதநாட்டியக்கலையிலும் ஈடுபாடு கொண்ட வாக்கேயகாரர் யார்,
   3) ஹம்சத்வனி இராகத்தின் தாய்ராகம் யாது?
   4) ஒன்பது இராகங்களால் அமைந்துள்ள வர்ணத்தை எவ்வாறு அழைப்பர்?
   5) M.S.சுப்புலட்சுமி நடித்த இரண்டு திரைப்படங்களின் பெயர்களைத் தருக.
   6) "பாஹிமாம்ஸ்ரீ" என்ற சௌக்ககால கிருதி அமைந்த இராகம் யாது?
   7) நான் சிங்காசனத்திற்கு வருகிறேன் என்ற கூட்டிசைப்பாடலை இயற்றியவர்.
   8) அமீர்குஸ்ரு உருவாக்கிய இரண்டு இராகங்கள் தருக.
   9) கெஞ்சிரா வாத்தியம் வாசித்து பிரபல்யம் பெற்ற இசைக்கலைஞர் ஒருவர் பெயர் தருக.
   10) தனது கர்த்தாவுக்குரிய ஸ்வரஸ் தானங்களை மட்டும் எடுத்துக் கொள்ளுமேயானால் அதனை எவ்வாறு அழைப்பர்.

(10x2=20 புள்ளிகள்)

### "ஆ" பகுதி

02. 1) ஜனகராகத்திற்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் நான்கினையும் தருக?
   2) சம்பூர்ண, ஷாடவ, ஔடவ பேதங்களினால் உண்டாகும் எட்டு வகையான வர்ஜ இராகப்பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணம் தருக.

03. 1) சூளாதியின் லட்சணத்தைத் தருக.
   2) உருப்படி உதாரணம் 2 தருக.

### "இ" பகுதி

04. பின்வரும் இராகங்களுள் ஒன்றிற்கு விரிவான லட்சணம் எழுதுக?
   1) சண்முகப்பிரியா 2) வஸந்தா

05. 1) மண்ணினால் செய்யப்பட்ட தாள வாத்தியம் யாது?
   2) அதன் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுக.
   3) அதன் அமைப்பு, வாசிக்கும் முறையினை விபரிக்குக?
   4) இவ் வாத்தியத்தை வாசித்து பிரபல்யம் பெற்ற இசைக்கலைஞர் இருவர் பெயர் தருக.

06. ஸ்வாதித்திருநாள் மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினையும் எழுதுக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk